# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 160/44 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/44 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

**வி. கொபல்லவ,**
*சனாதிபதி.*

*சனாதிபதியின் அலுவலகம்,*
*நுவரெலியா,*
1975 *ஏப்பிறல்* 19.

#### ஒழுங்குவிதி

எழுத்திலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது எது எவ்விதமிருப்பினும் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறிப்பிடப்பட்ட மாநகர சபை ஒவ்வொன்றினதும் அலுவல்களின் நிருவாகமானது 1975 சனவரி 1 ஆம் தேதி தொடக்கம் இவ் ஒழுங்குவிதி வலுவுள்ளதாயிருக்கும் வரை, அதுவரை மட்டுமே, அவ்வட்டவணையின் II ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் தரப்பட்ட ஆளுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற் இணங்க அத்தகைய மாநகரசபை ஒவ்வொன்றினதும் அலுவல்களின் நிருவாகம் எவ் ஆளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அவ் ஆள் மேற் சொல்லப்பட்ட காலத்தின்போது மாநகரசபைக்கும் அதன் முதல்வர்க்கும் மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் வழங்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

#### அட்டவணை

| நிரை I | | நிரை II |
|---|---|---|
| நீர்கொழும்பு மாநகரசபை | .. | நுகேகொடகே டொன் நிக்கொலஸ் குணசேகர |
| தெகிவளை–கல்கிசை மாநகரசபை | .. | சார்மன் சபுமல் அல்விஸ் ஜயசிங்க |
| காலி மாநகரசபை | .. | ரேலண்ட் டயஸ் உபயசிங்க |